மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) 1975-76-ஆம் ஆண்டுகளில் இந்திய அரசு நிறுவனமான பாரத தங்க சுரங்கங்கள் லிமிடெட் (Bhar. Gold Mines Ltd.) பூர்வாங்க சோதனைகளை மேற்கொண்டது. இச்சோதனைகளின்போது ஒரு சுரங்க வழியினையும் (A i L v l) 30மீ ஆழ இடைவெளியில் இரு சமதள சுரங்கத்தினையும் அமைத்து இந்திய சுரங்க அமைப்பினரால் (Indi n Bur aue of Mines) மாதிரிகள் சேகரித்து ஆய்வு செய்தது. மேற்படி ஆய்வின் மூலம் இப்பகுதியில் உள்ள படிவமானது குறைந்த கன்டெண்ட் உள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்படிவத்தைப் பயன்படுத்த இயலாது என ஆய்வுப் பணிகள் கைவிடப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு, வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். சிவராமன்: தலைவர் அவர்களே, இந்தக் கனிவள ஆராய்ச்சி கைவிடப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தற்சமயம் எந்த நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது? அது நல்ல முறையில் இருக்கிறது என்று ஜப்பான் நாட்டுக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாடு அரசு அதைப்பற்றி மீண்டும் ஆராய்ச்சி செய்வதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிலைமை கைவிடப்பட்டுவிட்டது என்பதுதான். மாண்புமிகு உறுப்பினரின் வேண்டுகோளை ஏற்றுஅந்தப் பகுதியில் தமிழ்நாடு ஜியாலஜி துறை மூலம் ஆய்வு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 139 மற்றும் 140 ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

தருமபுரி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நூற்பாலைகள் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 139—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தருமபுரி மாவட்டத்தில் ஓர் நூற்பாலை ஏற்படுத்த ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆம். தர்மபுரி மாவட்டத்தில் சுமார் ஏழு கோடி ரூபாய் செலவில் ஒரு நூற்பாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.